[20th April 1959

SRI A R. SUBBIAH MUDALIAR : உள்நாட்டிலும் அதேமாதிரி விறகு விலை ஏறியிருப்பது தெரியுமா ? அதைக் குறைப்பதற்கு அரசாங்கம் ஏதாவது முயற்சி செய்யுமா ?

THE HON SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. ஆனால் பொதுவாக நம் நாட்டில் விறகு பற்றுக்குறை இருக்கிறது. ஆகவே விலை அவ்வப்போது ஏறிவிடுகிறது. இருந்தாலும் அந்தக் கஷ்டத்தை நீக்குவதற்காக காட்டு இலாகா விறகுப்பொருள்களை—விறகு கொடுக்கும் செடிகளைப் பயிரிட்டு வருகிறார்கள்.

SRI T. T. DANIEL : In view of the fact that there is scarcity of fuel in our State, what are the concrete steps and measures that the Government propose to take to see that the State is self-sufficient in fuel?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I have already stated that the Government have got a programme of stepping up the planting of fuel species. This is being undertaken in a large measure in this State by the Forest Department.

SRI K. SATTANATHA KARAYALAR : காட்டு இலாகா கூட்டுறவு சங்கங்களுக்கு குறைந்த விலையில் விறகு வழங்கி, அதை நகர மக்களுக்கு விநியோகிக்கத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஏலம் போடப்படுகிறது காட்டு இலாகாவில். ஆனால் ஏலம் எடுக்கிறவர்கள் ஓரளவு நகரத்திலும் அவற்றை விற்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருக்கிறது. அதில் கூட்டுறவு சங்கங்கள் முன் வந்தால் கூட்டுறவு சங்கங்களுக்கும் விறகு விற்பதற்கு வசதி செய்து கொடுக்கப்படும்.

SRI A. R. SUBBIAH MUDALIAR : காட்டு இலாகாவில் ஏலம் எடுப்பவர்கள் பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்பாக இன்ன விலைக்குத்தான் விறகு விற்கவேண்டுமென்ற நிர்பந்தம் இருந்திருக்கிறது. இப்போது அதை எடுத்துவிட்டதன் காரணமாகத்தான் நகரங்களில் விறகு விலை அதிகமாக இருக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா? விறகு விலை நிர்ணயம் செய்து கூப்புகளை ஏலம் விடுவதற்கு சர்க்கார் கவனிக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்லுகிறேன். ஏலத்தில் விடும்போது இன்ன விலைக்குத்தான் விற்கவேண்டுமென்ற நிர்ப்பந்தம் விதிப்பது எவ்வளவு தூரம் சாத்தியம் என்பது தெரியவில்லை.

Midday meals for school children

* 7 *Q*.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Finance be pleased to state the total amount spent for midday meals for school children in the State, districtwar?

THE HON. SRI C. SUBRAMANIAM : A statement[a] is laid on the table of the House.

---

[a] Printed as Appendix II on page 45 infra

20th April 1959]

SRI T. T. DANIEL : May I know whether it is the object of the Government to provide mid-day meals to all school-children in our State? If so, may I know whether the Government have got any definite scheme to fulfil this object?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, the immediate programme is to provide mid-day meals to all poor children in the elementary schools in our State.

SRI J. MATHA GOWDER : இப்போது மத்திய உணவு ஒரு பிள்ளைக்கு 1 அணு வீதம் தான் கொடுக்கப்படுகிறது. அதை அதிகப்படுத்த சர்க்கார் யோசிக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : சர்க்காரில் கொடுக்கக்கூடிய 1 அணுவை வைத்துக்கொண்டு மாத்திரம் ஒரு பிள்ளைக்கு மத்திய உணவு கொடுக்கப்படவேண்டும் என்பது அல்ல. பொது மக்களிடமிருந்து நன்கொடை சேர்த்து குறைந்தது 10 நயா பைசா அளவாவது ஒரு மாணவனுக்கு ஒதுக்கவேண்டுமென்ற முறையில் இந்தத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : மத்திய உணவுக்காக அரசாங்கத்தில் இருந்து கொடுக்கப்படுகிற உதவி மிகவும் காலந்தாழ்த்தி வருகிறது என்று சொல்லப்படுகிறதே. இப்படி சில இடங்களில் தாமதம் எற்படுவதற்குக் காரணம் மாகாண லெவலில் தாமதமா? அல்லது ஜில்லா லெவலில் தாமதப்படுகிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM : எங்கே, எந்த இடத்தில் இந்த மாதிரி காலதாமதப்பட்டு தடை ஏற்பட்டிருக்கிறது என்பதை குறிப்பாக எடுத்துச்சொன்னால் அதைப்பற்றி விசாரிக்கிறேன்.

SRI P. S. CHINNADURAI : இந்தப் பகல்உணவுக்கு செலவு செய்யப்பட்டிருக்கும் பணம் சேலம், கோயம்பத்தூர் ஜில்லாக்களில் மிகவும் குறைவாகச் செலவழிக்கப்பட்டதாக இருக்கிறதே. அதற்கு என்ன காரணம்? சேலம் கோவை ஜில்லாக்களில் அதிக பணக்காரர்கள்தான் இருக்கிறார்கள் என்று அரசாங்கத்தார் கருதுகிறார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த இயக்கம் பொதுமக்கள் அதிகமான அக்கறை கொண்டு எடுத்து நடத்தவேண்டிய இயக்கம். குறைவாக செலவழிக்கப்பட்டிருக்கிறதென்றால் பொதுமக்கள் அதிகமான அளவில் முன் வரவில்லை என்று தான் கருதுகிறேன்.

SRI T. S RAMASWAMY PILLAI: கல்வி இலாகாவினுலும், ஹரிஜன நல இலாகாவினுலும் மெட்ராஸ் கார்ப்பரேஷனுலும் செலவழிக்கப்பட்ட தொகை என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. கல்வி இலாகாவினுல் கன்னியாகுமரிக்கு மிக அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. ஆனுல் ஹரிஜன இலாகாவினுல் கொடுக்கப்படுவது மிகக் குறைந்தது. இந்த அளவு எந்த அடிப்படையைக் கொண்டு கொடுக்கப்படுகிறது என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI C SUBRAMANIAM : கன்னியாகுமரி திட்டம் முன்பே இருந்தது. அந்தத் திட்டத்திற்குத் பொதுமக்களிடமிருந்து நன்கொடை வாங்கவேண்டும் என்பது இல்லை. இந்தத் திட்டம் தான் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. எழை மாணவர்களுக்குள் வித்தியாசம் இல்லாமல் நடந்து வருகிறது. மற்றப் பகுதியில் ஹரிஜனங்களுக்கு மட்டும் இருந்து வந்தது. இப்

[20th April 1959

போதுதான் ஏழை மாணவர்கள் எல்லோருக்கும் கொடுக்கவேண்டுமென்ற திட்டம் ஏற்பட்டது. ஆகவே இப்படி இப்போது ஒரேவாரியாக மத்திய உணவுத் திட்டம் அமையவேண்டியிருக்கிறது.

SRI S. LAZAR: கல்வி இலாகா, ஹரிஜன இலாகா கார்ப்பரேஷன் இவைகளினால் செலவழிக்கப்பட்ட தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. பொது மக்களிடமிருந்து நன்கொடையாக வந்தது எவ்வளவு இருக்கும் என்று சொல்ல முடியுமா? மொத்தம் எவ்வளவு செலவழிக்கவேண்டு மென்று சொல்ல முடியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: பொதுமக்களிடமிருந்து அநேக மாக பதினைந்து லட்சத்திலிருந்து இருபது லட்சம் வரையில் வந்திருக்கும் என்று நினைக்கிறேன், மொத்தம் எவ்வளவு செலவழிக்கவேண்டுமென்று சொன்னால் எத்தனை குழந்தைகளை பள்ளிக்கூடத்தில் எடுத்துக்கொள் கிறோமோ அதை பொருத்திருக்கிறது அது. எல்லாக் குழந்தைகளும் பள்ளிக்கூடத்திற்கு வருகிறபோது மூன்றில் ஒரு பங்கு குழந்தைகளுக்கு இந்தச் சாப்பாடு அளிக்கவேண்டியதாய் இருக்கும், குறிப்பாக ஆரம்பப் பள்ளிகளில் 6 முதல் 11 வரையில், பிறபாடு 11 முதல் 14 வரையில் அந்த எல்லா மாணவர்களும் அளிக்கவேண்டுமென்று சொன்னால் மொத்தமாக 2 கோடியிலிருந்து 3 கோடிவரைக்கும் செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. பொதுமக்கள் கொடுக்கவேண்டிய பகுதி வேறு.

SRIMATHI KAMALAMBUJA AMMAL: அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலில் இந்தத் திட்டம் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில்தான் இருக் கிறது என்று தெரிகிறது. ஹைஸ்கூல்களில் இந்தத் திட்டம் இருக்கிறதா? இல்லையானால் இதை அங்கும் கொண்டுவர முடியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: ஹைஸ்கூல்களில் சர்க்கார் உதவி பெற்று நடத்தப்படுவதில்லை. அங்கு இருக்கிறவர்களே அதை நடத்தி வருகிறார்கள். அவர்களுக்கும் சர்க்கார் உதவி கொடுக்கவேண்டுமென்று சொன்னால், இப்போது இருக்கிற தொகையை வைத்துக்கொண்டு தான் எந்த அளவு ஒதுக்கலாம் என்று கவனிக்க முடியும். ஆரம்பப் பள்ளிக்கூடங் களுக்கு எல்லாம் கொடுத்துவிட்டால் பிறகு உயர்நிலைப் பள்ளிகளிலும் கொடுப்பதைப் பற்றி ஆலோசிக்கலாம்.

SRI K. VINAYAKAM: With reference to the operation of the Madras Midday Meals scheme in the State for the poor students in the State, what is the arrangement that the Government have made to provide midday meals to the children studying in the schools in the City of Madras?

THE HON. SRI C. SUBRAMANIAM: The other system will come into vogue in such cases. That is, each school may have, I mean, each group of schools may take up a scheme of providing midday meals to the children studying in their respective schools and the Government will give grants to them.

SRI P. APPAVU: இதுவரையில் சினிமா நடிகர்கள் இந்த மத்திய உணவுக்காகக் கொடுத்த தொகை எவ்வளவு?

THE HON. SRI C. SUBRAMANIAM: கொடுத்தது எனக்குத் தெரி யாது. தனியாகக் கேள்வி கேட்டால் எல்லாவற்றையும் சேகரித்துப் பதில் சொல்லுகிறேன்.

I want to correct the answer which I gave to Sri Vinayakam. Whether Government assistance is to be given to the midday meals scheme of the municipalities and the Corporation of Madras is still under the consideration of the Government.

Stamp vendors

* 8 *Q.*—SRI R. SRINIVASA IYER : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the amount of discount paid to stamp vendors on the sale of (i) general stamps and (ii) court-fee stamps in the State during the years 1955–56, 1956–57 and 1957–58;

(*b*) the amount of discount paid as such discount before the stamp duty was increased and surcharge was imposed under the Indian Stamp Act;

(*c*) the maximum limit of value of general stamps which a stamp vendor can sell to any individual for a transaction; and

(*d*) whether there is any proposal to impose a maximum limit for sale of general stamps by stamp vendors?

THE HON. SRI M. A. MANICKAVELU :

(*a*)—	1955–56.	1956–57.	1957–58.
	RS.	RS.	RS.
(1) General Stamps ..	11,16,728	13,05,069	13,33,427
(2) Court-fee Stamps ..	1,56,696	1,32,771	1,13,117
Total ..	12,73,424	14,37,840	14,46,544

(*b*) The information required is not readily available.

(*c*) Rs. 400.

(*d*) No, Sir.

SRI R. SRINIVASA IYER : Are the Government aware that the rule regarding sales of stamps above Rs. 400 is generally transgressed by selling stamps of lower denominations to a number of persons and will the Government take steps to prevent such transgressions in order to prevent payment of excess commission to the stamp-vendors?

THE HON. SRI M. A. MANICKAVELU : This limit of Rs. 400 applies to a single transaction and of course it could be overcome by splitting the value of the stamps. If the hon. Member will write about it with suitable suggestions, it will be examined.

SRI R. SRINIVASA IYER : Considering the large amount of money that is being paid as commission in such transactions will the Government consider the desirability of appointing an upper-division clerk to sell stamps of denominations say, hundred and above?